*3*

# நிருபத்தைப் பெறுவோர் ஆழமாய் சபையின் நோக்கத்தை அறிந்து கொள்ளும்படி பவுலின் ஜெபம்

## (1:15-23)

*பவுல் எபேசுவிலிருந்த சகோதரர்களைப் பற்றி நினைத்தபோது அவர்களுக்காக ஜெபங்களை ஏறெடுத்தார். 1:15-23ல் கிறிஸ்துவின் சரீரமாகிய மகிமையுள்ள சபையின் இந்த அங்கத்தினர்களைக் குறித்து தேவனிடத்தில் என்ன ஜெபித்தார் என்பதை நாம் காண்கிறோம்.*

### *முன்னுரை (1:15-18)*

***[15]ஆனபடியினாலே, கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார்மேலுமுள்ள உங்கள் அன்பையுங்குறித்து நான் கேள்விப்பட்டு, [16]இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம்பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து, [17]நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்காக ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும், [18]தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்;***

*வசனங்கள் 15, 16.* ***ஆனபடியினாலே*** *என்பது "இந்தக் காரணங்களால்"[1] என பொருள்படும். இது ஒருவேளை வசனம் 3 முதல் 14 வரை குறிப்பிட்டவைகளையோ அல்லது வசனங்கள் 13, 14ல் அவர் பேசுகிற முத்திரையிடப்படுதல் மற்றும் அச்சாரத்தைக் குறித்தோ பேசுவதாக இருக்கலாம். இரண்டில் எதுவாயிருப்பினும், பவுல், எபேசு சகோதரர்களின் "விசுவாசத்தையும்" "பரிசுத்தவான்கள் அனைவர்மேலுமுள்ள அன்பையும் கேள்விப்பட்டு" தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி அவர்களைத் தம்முடைய ஜெபங்களில் "நினைத்துக் கொள்வதாகக்" குறிப்பிடுகிறார்.* NASB *இந்தச் சொற்றொடர்களை இந்தச் சகோதரர்கள் தங்களின் இலக்காகிய*

இயேசுவில் கொண்டுள்ள விசுவாசம், பாராட்டப்படத் தக்கது என்ற பொருளில் மொழிபெயர்த்துள்ளது, இதற்கு மாற்றாகச் சொல்லப்படும் கருத்து **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில்** இருப்பதை அடையாளப்படுத்தி அவருக்குள்ளாக அவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டதையும், அவருக்குள்ளாக அவர்கள் வாழ்ந்து ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பதையும் அடையாளப்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவை அவர்களுடைய இலக்காக வைத்துப் பேசக் காரணம் அதைத் தொடர்ந்து பவுல் பரிசுத்தவான்கள் எல்லார் மேலும் நீங்கள் கொண்டிருக்கிற அன்பையும் என்று தொடர்ந்து குறிப்பிடுகிறார், இதன் பொருள் பரிசுத்தவான்கள் அவர்களுடைய அன்பிற்கான இலக்கு என்றார்.

எபேசியர்களுக்குள் இருக்கிற இயேசுவிலுள்ள **விசுவாசம்,** *tēn kath humas pistin,* என்ற வார்த்தை, நேரடி பொருளில், "உங்களில் உள்ள விசுவாசத்தின் ஆழம்" அல்லது "உங்கள் விசுவாசத்தோடு கூடிய ஆழமான"[2] என்று அர்த்தப்படுகிறது. பவுல் அவர்களுடைய விசுவாசத்தைப் புகழ்ந்து, "அன்றாட வாழ்வுக்காக கர்த்தராகிய இயேசுவில் நாளுக்கு நாள் வளரும் விசுவாசம்" என்று பேசுகிறார்.[3] "சகல பரிசுத்தவான்கள் மேலும் உள்ள அன்பு" இந்த விசுவாசத்தை வெளிப்படுத்தியது அத்துடன் மற்ற கிறிஸ்தவர்களுடன் கொண்டிருந்த எபேசியரின் உறுதித்தன்மையையும் அது விளங்கப்பண்ணியது. நம்முடைய சகோதரர்களிடம் நாம் காட்டும் அப்படிப்பட்ட அன்பு மெச்சத்தக்கது, ஏனெனில் அவளுடைய சீஷர்கள் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பைக் குறிப்பிட்டு அதுவே அவருடைய சீஷர்கள் என்பதற்கு அடையாளம் என்று இயேசு குறிப்பிட்டார் (யோவான் 13:34, 35). இங்கே ஒன்றாகக் குறிப்பிடப்படுகிற விசுவாசமும் அன்பும் 1 தெசலோனிக்கேயர் 1:3 மற்றும் 2 தெசலோனிக்கேயர் 1:3 லும் ஒன்றாகக் காணப்படுகிறது. பூர்வகால பதிவேடுகளில், "விசுவாசம்" மற்றும் "அன்பு" ஆகியன "நம்பிக்கையோடு" சேர்த்து பெரும்பாலும் குறிப்பிடப்படும். இந்த மூன்று வார்த்தைகளையும் பவுல் 1தெசலோனிக்கேயர் 1:3 மற்றும் கொலோசெயர் 1:4, 5லும் பயன்படுத்திக் குறிப்பிடுகிறார். எபேசியர் 1ல், வசனங்கள் 12 மற்றும் 18 ல் "நம்பிக்கையையும்" வசனம் 15 ல் "விசுவாசத்தையும்" சேர்த்துப் பேசுகிறார்.

**கேள்விப்பட்டு** என்று குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தை எழுத்தாளர் எபேசுவிலிருந்த சபையைக் குறித்து தனிப்பட்ட முறையில் எதுவும் அறியாதவராயிருந்திருக்கிறார் என்றும், ஆகையால், இப்புத்தகத்தின் எழுத்தாளர் பவுலல்லாமல் வேறே யாரோதான் எழுதியிருக்க வேண்டும் என்று சில விளக்கவுரையாளர்களை நினைக்க விட்டுள்ளது. எப்படியிருப்பினும், இரண்டு உண்மைகளை கவனிக்க வேண்டும். முதலாவதாக பவுல் பிலேமோனைக் குறித்து தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தபடியால் அவரைக் குறித்து, "பிரியமுள்ளவனும் என் உடன் வேலையாளுமாயிருக்கிறவன்" என்று குறிப்பிட்டார் (பிலேமோன் 1). "உடன் வேலையாள்" என்று பவுலால் (பன்மையில்) குறிப்பிடப்பட்டபோது மாற்கு, அரிஸ்தர்க்கு தேமா, மற்றும் லூக்கா ஆகியோரை பிலேமோனுக்கு எழுதின நிருபத்தின் கடைசியில் குறிப்பிட்டார் (வசனம் 24). இந்த மனிதர்கள் பவுலுடன் உண்மையாகவே ஊழியம் செய்தவர்கள் என்று நமக்குத் தெரியும். பிலேமோன் பவுலோடு கூட தனிப்பட்ட முறையிலும் ஊழியம் செய்திருக்கலாம். இரண்டாவதாக,

பிலேமோன் பவுலால் மனம் மாற்றப்பட்டவர் என்பதில் சந்தேகமில்லை, ஏனெனில் "நீர் உம்மைத் தாமே" எனக்குக் கடனாகச் செலுத்த வேண்டுமெ ன்று பவுல் பிலேமோனைக் குறித்து எழுதுகிறார் (வசனம் 19). இருந்தாலும் மேலும், பவுல் பிலேமோனின் அன்பையும் விசுவாசத்தையும் குறித்துத் தாம் *கேள்விப்பட்டதாகச்* சொன்னார் (வசனம் 5). அவருடைய விசுவாசத்தையும் அன்பையும் கேள்விப்பட்டதாகக் குறிப்பிடுவதால் பவுலுக்கு பிலேமோனைக் குறித்து தனிப்பட்ட முறையில் எதுவும் தெரிந்திருக்கவில்லை என்பதுமல்ல இதன் பொருள் என்னவெனில், பவுல் கடைசியாக பிலேமோனைப் பார்த்த பின்பு, அவருடைய தொடர் வளர்ச்சியையும் விசுவாசத்தையும் குறித்து பவுல் கேள்விப் பட்டதைக் குறிப்பிடுகிறார் என்று பொருள். ஆகையால், எபேசியருடைய விசுவாசத்தையும் அன்பையும் பவுல் கேள்விப்பட்டதாகக் குறிப்பிடுவது, அவர்கள் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேறுவதை அவர் கவனித்துக் கொண்டிருந்ததை பொருள்படுத்துகிறது.

மேலும் பவுல் தனது சகோதரர்களுக்காக **இடைவிடாமல்** தாம் **ஸ்தோத்திரம் செலுத்துவதாகச்** சொன்னார். பவுல் தனது ஜெபத்தில் சேர்த்துக் கொண்ட ஜனங்கள் ஒரு பெரிய பட்டியலாக இருந்திருக்க வேண்டும். "ஸ்தோத்திரம் செலுத்தி" என்பது கிரேக்க வினைச் சொல்லாகிய *யூகாரிஸ்டியோ* என்பதன் மொழிபெயர்ப்பு, அதன் நேரடிப் பொருள் "நன்மை யான கிருபை."[4] தன்னுடைய நிருபங்களை பெறுவோரைக் குறித்து தான் எதை அறிந்திருந்தாரோ அதற்காக தொடர்ந்து ஸ்தோத்திரம் செலுத்தினார். அவர் அவர்களுடைய விசுவாசத்துக்காகவும் அன்புக்காகவும் அவர்கள் மூலம் தேவன் செய்த கிரியைகளுக்காகவும் நன்றியுள்ளவராயிருந்தார்.

***வசனங்கள் 16, 17.*** பவுல் அவர்களுக்காக ஸ்தோத்திரம் செலுத்தி யதோடு, தனது **ஜெபங்களில்** நினைப்பதாகச் சொன்னார். "ஜெபங்களில்" என்பது கிரேக்கப் பெயர்ச் சொல்லான *proseuchē,* என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. இது மிக அதிகமாக புதிய ஏற்பாட்டில் "ஜெபத்திற்காகப்" பயன்படுத்தப்பட்ட பதம். பின்வரும் வசனங்களில், தேவனிடத்தில் அவர் ஏறெடுத்த விண்ணப்பங்களைக் காண்கிறோம்.

**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்** தேவனும் "பிதாவுமானவர்" என்று பவுல் குறிப்பிடுவது வசனம் 3 ஐ நினைவுபடுத்துவது. S. D. F. Salmond சொன்னதாவது,

> நித்திய தேவத்துவத்தில் குமாரன் தமது ஜீவனை பிதாவிடத்திலிருந்து பெற்றார், தெய்வீகத்தின் ஒரே ஊற்றுக்காரணி, மற்றும் *குமாரன்* உதவியாளரைப் போல *பிதாவின்* உதவியாளராக இருக்கிறார் எனும் பொருளில் குறிப்பிடப்பட்டு அதே தெய்வீகத் தன்மையில் இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறது. நம்முடைய கர்த்தருடைய மீட்பின் ஊழியத்தில், அவர் நித்திய பிதாவின் குமாரனாக இருந்து கொண்டே, தேவனுடைய கிறிஸ்துவாகவும், தேவன் தம்மை அவருக்குள் வெளிப்படுத்தி அவரை *அனுப்பி* [கலாத்தியர் 4:4], அவரை *உயர்த்தி* [பிலிப்பியர் 2:9]. அவரிடத்திலிருந்து ராஜ்யத்தைத் *திரும்பப் பெற்றுக்* [1 கொரிந்தியர் 15:24] கொள்ளப்போகிறார். தமது ஊழியத்தின் மதிப்புக்காக, அவரது தியானம், அவருடைய அலுவலகப் பணி, மற்றும் உறவுமுறை ஆகியவற்றில்,

*அவர் தேவனைத் தமது தேவனாகக் கொண்டிருக்கிறார், அவருடைய கட்டளையை இவர் ஏற்று அவருடைய மீட்பின் நோக்கத்தை (குமாரன்) நிறைவேற்றப் போகிறார்.*[5]

**மகிமையின் பிதாவானவர்** என்பது மகிமைக்கு ஊற்றாயிருக்கிறவர், அல்லது மகிமையைக் கொடுக்கிறவர் எனும் பொருளில் குறிப்பிடப்படலாம். இந்த வார்த்தைகளை "மகிமைகளுக்கு சொந்தக்கார பிதாவானவர்" என்று பொருள் படத்தக்க கண்ணோட்டத்தில் பார்த்தல் நலம். Kenneth S. Wuest கூற்றுப்படி, "மகிமை" என்பதற்கு முன் திட்டமான துணைச் சொல் அதை "ஒரே மகிமை" எனும் பொருளைக் கொடுக்கச் செய்கிறது. "அதன் பொருள் அவரே மகிமைக்குச் சொந்தமான பிதா."[6] Andrew T. Lincoln இதை "மகிமை" என்பது "தெய்வீகப் பிரசன்னம் மற்றும் வல்லமையின் உயர்சிறப்பை" பேசுகிறது என்றார்[7] மேலும் தொடர்ந்து, பவுலின் எழுத்துக்களில், "மகிமை" மற்றும் "வல்லமை" என்பவைகள் தேவனுடைய செயல்பாடுகளில் ஒத்த பதங்களாக காணப்படக்கூடும் என்றார். இந்தக் கருத்து தேவனுடைய பிரசன்னத்தின் சாயலை இணைக்கக்கூடியது - அவருடைய தெய்வீகத்தன்மை - அவருடைய வல்லமையுடன் எபேசியர்களின் மனதில் ஒளியூட்டக்கூடும், பவுல் ஆசீர்வாதங்களுக்காக ஜெபித்தவைகளில் இதுவும் ஒன்று (1:18).

எபேசியர்கள் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்பினது தம்மை **நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை** உங்களுக்குத் தந்தருள வேண்டும். இதை தமது மூன்று குறிப்பிடத்தக்க ஜெபத்தில் கேட்கிறார் (காண்க 1:18, 19) என்பதை அவைகளில் அறிந்து கொள்ளக் கூடும். சில விளக்கவுரையாளர்கள் இந்த "ஆவியை" என்பது "ஆவியானவர்" அல்லது "பரிசுத்த ஆவியைக்" குறிப்பதாக நினைக்கிறார்கள். ஆகிலும், "ஆவியை" என்பதற்கு முன் துணைச் சொல் எதுவும் வசனப்பகுதியில் எதுவும் குறிப்பிடப்படவில்லை, மேலும் இதன் முன்னும் பின்னும் வரும் வசனங்களில் தேவத்துவத்தின் மூன்றாம் நபரைக்குறித்த தெளிவான எந்த ஆதாரத்தையும் கொடுக்கவில்லை. சகோதரர்கள் "ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைப்" பெற வேண்டுமென்று பவுல் விரும்பினாரேயொழிய "ஆவியானவர் கொடுக்கிற ஞானத்தையும் தெளிவையும்" பெற வேண்டுமென்று விரும்பவில்லை. இருப்பினும், அவர்களுடைய வாழ்க்கையில் ஆவியானவரும் சம்பந்தப்பட்டிருந்தார், ஆவியானவரே சுவிசேஷத்தின் தெளிவை ஏவப்பட்ட மனுஷர்கள் மூலமாக தெரியப்பண்ணினார் (1 கொரிந்தியர் 2:13).

எபேசியரின் இந்தப் பகுதியைப் புரிந்து கொள்ள கொலோசெயர் 1:9-11 ஆகிய ஒத்தவசனம் உதவுகிறது. கொலோசெயர்கள் "எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட" பவுல் ஜெபம் பண்ணினார். கொலோசெயர்கள் தேவனுடைய ஞானத்தைத் தங்களுடைய வாழ்க்கையில் பயன்படுத்த ஏதுவான பற்றிக் கொள்ளுதலையும் ஞானத்தையும் உடைய மனதால் அறியும் திறன் பெற வேண்டும் என்று அவர் விரும்பினார். விருப்பப்பட்டதன் விளைவாக அவர்கள் தேவனைக் குறித்து அறிகிற அறிவினாலே பெருக அல்லது தேவனை நிறைவாய்

அறிந்து கொள்ள வேண்டும்.

"அறிவு" (1:17; கொலோசெயர் 1:10) என்பது *epignōsis,* என்பதி லிருந்து வந்தது அதன் பொருள் "அதிகமான பெரிய அளவிலான ஒரு பரந்த அறிவு."[8] "அறிவுக்கு" கிரேக்கப் பெயர்ச் சொல் *gnosis.* முற்சேர்க்கையான *epi* சேர்க்கப்பட்டு, அறிவு மற்றும் அந்த அறிவைப் பெற்றவர் வலிமையான ஒரு செல்வாக்குடையவராக விளங்கச் செய்கிற மிகப் பெரிய பங்களிப்பை குறிப்பிடுகிற சொல்லாகும்.[9]

தேவனுடைய மிகப் பெரிதான அறிவை நாம் அடைவது எப்படி? இந்த வசனப்பகுதியில் ஜெபத்திற்கு பதில் கொடுக்கும் விதமாக, தேவன் ஞானத்தை அளித்து, தம்முடைய வெளிப்படுத்தின செய்தியின் சத்தியத்தை தம்முடைய ஜனங்கள் புரிந்து கொண்டு முறையாகப் பயன்படுத்த உதவுகிறார். தேவனோடு நாம் எவ்வளவாய் நெருங்கின உறவுமுறையில் வாழுகிறோமோ, அவ்வளவு சிறப்பாய் நாம் தேவனை அறிந்து கொள்வோம். ஆவிக்குரிய வளர்ச்சி காலத்தினூடே வருவது, பதிலளிக்கப்பட்ட ஜெபம் மற்றும் தேவனுடைய அருள் கிடைக்கும் போது வருகிறது. இந்த வசனத்தில் பவுலின் குறிக்கோள் எபேசியர்கள் மேற்கொண்டு தெளிவை (வெளிப்பாட்டை) பெற வேண்டியதில்லை, ஆனால் அவர்கள் ஏற்கனவே பெற்றுள்ள வெளிப்பாட்டை (தெளிவை) புரிந்து தேவனுடைய நிறைவான அறிவைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான். தேவனைக் குறித்த இந்த அறிவோடு, அவர்கள் மூன்று காரியங்களை பெற்றுக் கொள்ளும்படி வசனம் 18, 19ல் ஜெபிக்கிறார்.

**வசனம் 19.** "மனம்" என்பது மனிதனுடைய புத்தி, உணர்வு மனத்திடம் ஆகியவற்றின் இருப்பிடம், இந்த உள்மனதுடன், மனிதன் தன் மனதில் எப்படி சிந்திக்கிறானோ அப்படியே இருக்கிறான் என்று ஏன் வேதாகமம் பேசுகிறது என்று புரிந்து கொள்ள முடியும் (நீதிமொழிகள் 23:7; KJV; மத்தேயு 9:4), இருதயப்பூர்வமான அன்பு (மத்தேயு 22:37), மனப்பூர்வமான கீழ்ப்படிதல் (ரோமர் 6:17). பவுல் **மனக்கண்களைக் குறித்துப் பேசுகிறார்,** இதன் மூலம் புத்தி. உணர்வு, சிந்திக்கிற சித்தம், பகுத்தறிவு, புரிந்து கொள்ளுதல், தீர்மானித்தல், மற்றும் பெற்றுக் கொண்ட தகவல் பேரில் செயல்படுதல் ஆகியவைகளைக் கொண்ட இருப்பிடம் என்பதை அவர் பொருள்படுத்துகிறார். தேவனுடைய செய்தியை ஒருவர் கேட்கும் போது அவர் அதை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது தள்ளிவிடலாம். அவர் அதை புரிந்து கொள்ளுதலோடு ஏற்றுக் கொண்டால், அவருடைய கண்கள் திறக்கப்பட்டது என்று நாம் சொல்லலாம் (லூக்கா 24:31). தவறாகப் புரிந்து கொண்டு அவர் புறக்கணிப்பாரானால், உண்மையைப் புரிந்து கொள்ளுமுன் கொண்டிருக்கும் தப்பெண்ணம், ஒருதலை விருப்பு அல்லது வெறுப்பு அடிப்படையைக் கொண்டிருப்பவரை அவருடைய கண்கள் மூடப்பட்டுள்ளது என்றோ அல்லது குருடாக்கப்பட்டுள்ளது என்றோ சொல்வோம் (மத்தேயு 13:15, 16). இந்தப் பொருளில் மனதிற்கு கண் இருக்கிறது. பவுல் எபேசியர்களுக்கு ஜெபித்தலில், "உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று" ஜெபித்தார்.

**பிரகாசமுள்ள மனக்கண்கள்** என்பது எபேசியர்களுக்கு கடந்த காலத்தில் கொடுக்கப்பட்ட ஏதோ ஒன்றுக்கு நிகழ்கால விளைவைச் சுட்டிக் காட்டுகிறது. "உங்களுடைய பிரகாசமுள்ள கண்களைக் கொடுத்தி

ருப்பதால், இப்போதைய விளைவு மூலம் இப்போது நீங்கள் விழிப்புணர்வு பெற்றவர்களாயிருக்கிறீர்கள்." அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு கீழ்ப்படிந்தபோது இந்தப் பிரகாசம் நிகழ்ந்தது. அவர்கள் இப்போது விழிப்புணர்வு பெற்றவர்களாய் வாழ்ந்து கொண்டுள்ளனர். பவுலின் ஜெபம் இந்த விழிப்புணர்வில் வளர வேண்டும் என்பதுதான், அல்லது அவர்கள் ஏற்கனவே பெற்றவைகளை அறிந்து கொண்டிருக்க வேண்டும். "பிரகாசம்" என்பது எபேசியர்கள் மனமாற்றம் பெற்றதற்கு முன்பு இருந்த நிலைக்கு முரணானது. அவர்கள் தங்கள் "புத்தியிலே அந்தகாரப்பட்டிருந்தார்கள்" (4:18); ஆனால் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமுள்ளவர்களும் விசுவாசிகளாகவும் மாறிய பிறகு, அவர்கள் "கர்த்தருக்குள் வெளிச்சமாயும்" "வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்து கொள்ளவும்" வேண்டியவர்களாயிருந்தனர் (5:8).

எபேசியர்கள் கண்கள் திறக்கப்பட்டவர்களில் சிலராக இருந்தவர்களும் இருளிலிருந்து வெளிச்சத்துக்கு மாறினவர்களும் ஆவார்கள். சாத்தானின் அதிகாரத்தினின்று விடுதலையாகி தேவனுடைய அதிகாரத்துக்குட்பட்டவர்களாயும், கிறிஸ்துவுக்குள் கொண்ட விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படி பரிசுத்தமாக்கப்பட்டவர்களுமாவர் (காண்க நடபடிகள் 26:18). இந்தக் காரியங்களைப் பெற்றதினால் இப்படிப்பட்ட புரிந்து கொள்ளுதலில் அவர்கள் வளர வேண்டியவர்களாயிருந்தனர்.

## தேவனுடைய அழைப்பின் மகா மேன்மை, அவருடைய சுதந்தரம், மற்றும் அவருடைய வல்லமை *(1:18, 19)*

**[18]தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் [19]தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்.**

எபேசியர்கள் அவர்களுடைய விசுவாசத்திலே வளர்ந்து முழுமையடைகிறவர்களாயிருக்கையில், பவுல் அவர்கள் தேவனு டைய நோக்கத்தை ஆழமாக புரிந்து அது அவர்களுக்குள்ளே கிரியை செய்கிறதை அறிந்து கொள்ள வேண்டுமென்று ஜெபித்தார். அவர் அவர்கள் பிரகாசமடையவும், அல்லது இன்னும் அதிகத் தெளிவாகக் காணவும் கூடிய மூன்று பகுதிகளைக் குறிப்பிட்டார். ஆகையால், தேவனுடைய அழைப்பு கொண்டுவந்த நம்பிக்கையை முழுமையான வகையில் அறிந்து கொள்ளவும், அவர்களுக்குக் கிடைக்கும் சுதந்தரத்தின் ஆஸ்தியின் மகிமையையும்

தேவனுடைய மகத்துவம் நிறைந்த வல்லமையான சத்துவத்தையும் குறித்து ஜெபித்தார்.

**வசனம் 18.** முதலாவதாக, பவுல் தமது வாசகர்கள் அவர்களுக்கென்று கொடுக்கப்பட்ட நம்பிக்கையைக் குறித்து ஆழமான அறிவைப் பெற வேண்டுமென்று விரும்பினார். ஏனெனில் தேவனுடைய நோக்கம் அவர்களுக்குள்ளே கிரியை செய்கிறது. "நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்று அறியும்படிக்கு" நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று தான் ஜெபிப்பதாக அவர் சொன்னார். **அவருடைய அழைப்பு** என்று குறிப்பிடப்படுவது மறுபடியும் இந்நிருபத்தின் ஆரம்ப வார்த்தைகளுக்கு நம்மை நினைவூட்டுகிறது, அங்கே பவுல் தேவன் "நம்மைத் தெரிந்து கொண்டார்" என்று பேசுகிறார் (1:4). மேலும் அது பின்வரும் வசனங்களிலும் காணச் செய்கிறது, "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு" (4:1). மேலும் "ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டீர்கள்" (4:4) என்றும் சொன்னார், இதை பவுல் தமது நிருபத்தின் கடைசியிலும் பேசினார். தேவனுடைய அழைப்பை, ஜனங்கள் தங்களுடைய இரட்சிப்புக்காக ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ செய்கிற விஷயத்தை தேவன் தெரிவு செய்வதில்லை, எனவே தேவனின் அழைப்பு ஒரு எல்லைக்கு உட்பட்டதல்ல, நமக்கு அதற்கான வழியை ஏற்படுத்தி அவருடன் நட்புறவு கொள்ளச் செய்கிற காரியத்தின் துவக்கம் அவருடையது என்று பேசுகிறது உண்மையே. "கிறிஸ்துவுக்குள்" நமக்கு நம்பிக்கையிருக்கிறது, இந்த நம்பிக்கையை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறபடியால் அது நம்முடையது, அது அவருடைய "மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கிறது" (1:12).

எபேசியரின் பாவநிலைக்கு மாற்றாக, பவுல் நிருபத்தை எழுதும் போது, அவர்கள் முழுமையான சுதந்தரத்தைப் பெறுகிறதாக அவர்களின் நம்பிக்கையிருந்தது (1:11-14). அவர்களுடைய நம்பிக்கை பரலோகத்திற்காக இருந்தது (கொலோசெயர் 1:5), சுவிசேஷத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வதுடன் கூடிய ஒரு வாக்குத்தத்தமாக அது இருந்தது (1:23). **நம்பிக்கை** (*elpis*) என்பது "சில நன்மைகளை விரும்பி அதை அடைவோம் என்ற ஆவலைக் கொண்டிருப்பது."[10] இந்தக் கிறிஸ்தவர்கள் ஆசைப்பட்டது பரலோகம் மட்டுமல்ல, தேவனுடைய வாக்குத்தத்தம் இருக்கிறபடியால், அங்கே அவர்கள் வாழவும் ஆசைப்பட்டனர். நம்பிக்கை என்பது வெறும் ஆசை ம ட்டுமல்ல; எந்த எதிர்பார்ப்புமின்றி ஒருவர் பரலோகத்தை ஆசைப்படலாம், அது வேதாகமம் காட்சிப்படி, அங்கே போகலாம் என்பது அவர்களின் ஆவல். அல்லது நம்பிக்கை என்பது வெறும் எதிர்பார்ப்பு மட்டுமல்ல: ஒருவர் ஏதோ ஒரு பயங்கரம் நிகழ்வது போல எதிர்பார்க்கலாம், ஆனால் அதற்கென அவர் ஆசைப்படுவதில்லை. நம்பிக்கை என்பது ஆசைப்படுதலும் எதிர்பார்க்குதலுமாகும். இந்த நம்பிக்கை தேவனுடைய வார்த்தையை ஆதாரமாகக் கொண்டது, இந்த வாழ்வில் கிறிஸ்தவன் தொல்லைகளை எதிர் கொள்ளும் போது "அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது" (எபிரெயர் 6:19). அவருடைய "அழைப்பின் நம்பிக்கை" யில் வளரும்படியாய் எபேசிய வாசகர்களை பவுல் வேண்டுகிறார்.

**வசனம் 18.** இரண்டாவதாக, எபேசியர்கள் "பரிசுத்தவான்களிடத்தில்

தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று அறிகிற" அறிவைப்பெறும்படி பவுல் ஜெபித்தார். பவுல் ஏற்கனவே "சுதந்தரம்" என்பதை இரண்டு விதமாக அதிகாரம் 1 ல் பயன்படுத்தினார். பரிசுத்தவான்கள் தேவனுடைய சுதந்தரவாளிகள் (காண்க 1:11), மற்றும் பரிசுத்த ஆவியானவர் "நமது சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (1:14). "பரிசுத்தவான்களிடத்தில் தேவனுக்கு உண்டாயிருக்கிற சுதந்தரம்" என்பதை பவுல் மேலே முதலாவது சொன்னதை கொண்டு பேசியிருப்பாரானால், பிறகு அது தேவனுடைய பார்வையில் எவ்வளவு விலையேறப்பட்டது என்று அவர்கள் அறியவேண்டுமென அவர் விரும்பினார். "சுதந்தரம்" என்பதை பவுல் இரண்டாவது சொன்னதை மனதிற்கொண்டு பேசியிருப்பாரானால், பிறகு அடுத்த உலகில் கிடைக்கும் மகிமையின் முழு ஐசுவரியத்திற்காக முழுமையான பாராட்டுதலை (புகழ்ச்சியை) உடையவர்களாக இருக்க வேண்டும் என்று அவர்களிடம் விரும்பினார். வசனம் 14 ல் பவுல் சொன்னதை ஆதாரமாகக் கொண்டு, பார்ப்போமாகில் தேவனுடைய பரிசுத்தவான்களிடத்தில் உண்டாயிருக்கிற சுதந்தரத்தின் மகிமை என்பது, பவுல் மேலே இரண்டாவதாகக் குறிப்பிட்டதை மனதில் கொண்டுதான் பேசியிருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதை அவர்கள் அறிய அவர் ஜெபித்தார்.

**வசனம் 19.** பவுல் மேலும் எபேசியர்கள் "... விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகாமேன்மையான மகத்துவம் இன்னதென்று" எபேசியர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். இந்தக் கிறிஸ்தவர்களுக்கு பவுலின் ஜெபத்தின் மூன்றாம் விண்ணப்பம் இது. அது பெலத்தினால் நிரப்பப்பட்டிருந்தது; தமது வாசகர்கள் தேவனுடைய **வல்லமையைக்** குறித்து மிகப் பெரிதாக புகழுகிறவர்களாக இருக்க ஜெபித்தார்.

இந்த வல்லமையை குறிப்பிட நான்கு பதங்களை அப்போஸ்தலன் பயன்படுத்துகிறார். "வல்லமையை" அவர் அறிமுகப்படுத்தும்போது "தேவனுடைய பலத்த சத்துவத்தின் வல்லமை" என்றார் (*huperballon megethos*). இதில் "அப்பால் எய்கின்ற ... வல்லமை," சத்துவத்தின் உச்சக்கட்டத் தன்மை அளவிட இயலாதது என்ற ரீதியில் குறிப்பிடப்படுகிறது.[11] தேவனுடைய வல்லமைக்கு அளவு இல்லை. "வல்லமையைக்" குறிக்கும் நான்கு வார்த்தைகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளபடி *dunamis,* என்பது கிரேக்கப் பதத்தில் "இயல்பான செயல் திறமை, அல்லது பற்றியிருக்கும் இயற்கை வல்லமை"; *energeia,* என்பது **வேலை செய்கிற** தன்மை மற்றும் அதின் பொருள் "சக்தி, செயல் திறன்"; *ischus,* எனும் பதம் **பெலன்** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அது கொடுக்கப்படுகிற "சரீர பெலன்"; மற்றும் *kratos,* **வலிமை** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒரு வினைச்சொல், இது "செயலுக்கம் கொடுக்கும் சக்தி."[12] இந்த நான்கு கருத்துக்களையும் ஒன்றாக்கி, தேவன் (நான்கையும்) ஒருங்கே கொண்டு அளவிற்கடங்காத செயலூக்கங்களை நடப்பிக்கிற இயல்பான திறன் படைத்தவர் என்று பவுல் காட்டுகிறார். பவுல் எபேசியருடைய நம்பிக்கையையும் சுதந்தரத்தையும் தேவனுடைய வல்லமையுடன் இணைத்துப் பேசுவதால், தேவன் அவர்களுடைய நம்பிக்கையை மோசம் போக்காமலும் அவர்களுடைய சுதந்தரத்தைக் கொடுக்க

தவறாமலும் காத்துக் கொள்வார். தாம் வாக்குத்தத்தம் செய்தவைகளை நிறைவேற்ற தேவன் வல்லவராயிருக்கிறார்!

தேவனுடைய மகத்துவம் நிறைந்த வல்லமை **விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில்** காண்பிக்கப்படுகிறது. "நம்மிடத்தில்," என்பது கிரேக்க முன்னிடைச் சொல் *eis*, என்பதன் மொழியாக்கம், இது தேவனிடத்தில் தொடர்ந்து விசுவாசமுள்ளவர்களிடத்தில் அவருடைய வல்லமை விளங்கப் பண்ணப்படுவதைக் காட்டுகிறது, அதினால் அவர்களுடைய நம்பிக்கைக்கும் சுதந்தரத்துக்கும் உறுதியான நம்பிக்கையளிக்கிறது. "விசுவாசிக்கிறவர்கள்" என்பது ஒரு தொடர் செயலைக் குறிக்கும் வினைச்சொல்.

இப்படியாக பவுல் தம்முடைய சகோதரர்கள் பிரகாசமுள்ள மனக்கண்களை கண்டடையத் தக்க மூன்று பகுதிகளைச் சொல்லி முடிக்கிறார்.

## தேவனுடைய வல்லமை விளக்கப்படுத்தப்படுதல் *(1:20-23)*

***20எல்லாத் துரைத்தனங்களுக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, 21அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, 22எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, 23எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றுக்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.***

வசனங்கள் 20 முதல் 23 வரை பவுலின் ஜெபம் தொடருகிறது. எபேசியர்களின் மீதான அவருடைய அன்பு காணப்படுகிறது, மற்றும் தேவன் மேல் வைத்துள்ள அவருடைய விசுவாசம் அவரது ஜெபத்தினூடே அவர்களுக்கான வேண்டுதலில் பிரகாசிக்கிறது.

**வசனம் 20.** இந்த சகோதரர்கள் தேவனுடைய வல்லமையை இன்னும் அதிக நிறைவாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் விளக்கி அவரைப் புகழும்படி பவுல் வினவினார்.

நமது வசனப்பகுதி "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது (தேவனுடைய) பலத்த சத்துவத்தின் வல்லமையைக்" குறித்து பேசுகிறது. அவரிடத்தில் **"நடப்பித்த"** என்பது கிரேக்க வினைச்சொல்லான *energeō*, என்பதின் மொழிபெயர்ப்பு, அதன் பொருள் "சுறுசுறுப்பாய் செயல்படுவது."[13] கடந்த காலத்தில் நடப்பித்ததைச் சுட்டிக்காட்டும் வினைச் சொல் நடந்ததைக் காட்டுகிறது. இதன் பொருள் தேவன் கடந்த காலத்தில் மிக வல்லமையாய் செயல்பட்டார் என்பதே, இதன் மூலம் தமது ஜனங்களின் எதிர்கால நம்பிக்கையை நிறைவேற்றுவார் என்று உறுதியளிக்க அப்பொழுதும் அவருடைய வல்லமை செயல்படும். **கிறிஸ்துவுக்குள்** நடப்பிக்கப்பட்ட தேவனுடைய வல்லமைக் குறித்து பேசி, பிறகு அந்த வல்லமை சாதித்தவைகளை பவுல் குறிப்பிட்டார்: **மரித்தோரிலிருந்து அவரை எழுப்பினார்.** கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இயேசுவின் தெய்வீகத்தை நிரூபிக்கிற கிரீடம் (ரோமர் 1:4ஐ காண்க).

அவருடைய உயிர்த்தெழுதல் தேவனுடைய மகத்துவத்தின் வல்லமையை விளங்கப் பண்ணுவது. பவுல் தனது இந்த வசனப் பகுதியில் சிலுவையைக் குறிப்பிப்பட வில்லை, ஏனெனில் - சிலுவை எவ்வளவுக் கெவ்வளவு முக்கியமானதோ - அவ்வளவுக்கவ்வளவு பெலவீனமானது (2 கொரிந்தியர் 13:4) என உயிர்த்தெழுதலின் வல்லமைக்கு முரணாகப் பேசப்பட்டது. கொலோசெயர் 2:12ல், அப்போஸ்தலன் *energeia* எனும் வினைச் சொல்லைப் பயன்படுத்தி இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததையும் விசுவாசிகள் ஞானஸ்நானத்திலே எழுப்பப்பட்டதோடும் இணைத்துப்பேசுகிறார். மரித்தோரை எழுப்ப மகத்தான வல்லமை தேவை, அந்த வல்லமை தேவனுக்கே உரியது.

**வசனம் 20.** பவுல் மேற்கொண்டு குறிப்பிடுகையில் தேவனுடைய வல்லமையினால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியது மாத்திரமல்ல அவரை உயர்த்தியும் இருக்கிறார் என்றார்: **அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்தார்.** “உட்காரச்செய்தார்” எனும் பொருள் மீட்பின் பணி நிறைவு பெற்றதைக் காட்டுகிறது, ஆகிலும் அது கனத்தையும், மகிமையையும், மகத்துவத்தையும் குறிப்பிடுகிற இடமாகவும் சொல்லப்படுகிறது ஏனெனில் உட்காரச் செய்யப்பட்ட இடம், தேவனுடைய “வலது பாரிசம்.” பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வலது கரம் தயவைப் பெறுகிற இடமாக, வெற்றியையும், வல்லமையையும் குறிக்கிற இடமாக காட்சியளித்தது (சங்கீதம் 80:17; 20:6; 89:13). கிறிஸ்துவை மகிமைப்படுத்திய அந்த வல்லமையே எபேசியர்களுக்கும் போதுமானதாயிருந்து அவர்களுடைய நம்பிக்கையை நிறைவேற்றவும் அவர்களை சுதந்தரத்துக்குள் கொண்டுவரவும் கூடியதாயிருக்கிறது. (“உன்னதங்களில்,” எனும் பதத்தை 1:3 க்கான விளக்கவுரையில் காண்க.)

**வசனம் 21.** தேவனுடைய வல்லமையினாலே இயேசுவை உயர்த்துவது சாத்தியமாயிற்று என்று பவுல் வலியுறுத்தினார். மேலும் சொல்லுகையில் கிறிஸ்து எல்லாத் துரைத்தனத்துக்கும் (*archē*) **அதிகாரத்துக்கும்** (*exousia*) **வல்லமைக்கும்** (*dunamis*) **கர்த்தத்துவத்துக்கும்** (*kuriotēs*). **எல்லா நாமத்துக்கும்** மேலாய் உயர்த்தப்பட்டிருப்பார், என்றார். இதில் முதல் இரண்டு கிரேக்க வார்த்தைகள் மேலும் வசனம் 3:10 லும் 6:12 லும் கூட பவுலால் பயன்படுத்தப்பட்டன. இந்த வசனங்களின்படி, சபை “துரைத்தனத்துக்கும்” “அதிகாரத்துக்கும்” தேவனுடைய ஞானத்தை அறியச் செய்கிறது, மற்றும் கிறிஸ்தவப் போராட்டம் “அதிகாரத்துக்கும்,” “துரைத்தனத்துக்கும்” எதிராகப் போராடுவது (KJV). அதே இரண்டு கிரேக்க வார்த்தைகள் கொலோசெயர் 2:10 லும் 2:15 லும் காணப்படுகின்றன. அங்கே, கிறிஸ்து சகல “துரைத்தனங்களுக்கும்” “அதிகாரத்துக்கும்” தலைவராயிருக்கிறார் என்றும், அந்த “துரைத்தனங்களும்” “அதிகாரங்களும்” நிராயுதபாணிகளாக்கினார் என்றும் சொல்லுகிறார். ரோமர் 8:38, 39 ன்படி, அதிகாரங்களானாலும் (*archē*) வேறு எந்தக் காரியங்களானாலும் தேவனுடைய அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க மாட்டாது. கொரிந்தியருக்கு எழுதும் போது பவுல் கடைசிகாலத்தைக் குறித்து பேசி, கிறிஸ்து இராஜ்யத்தை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது அவர் “சகல துரைத்தனங்களையும் சகல அதிகாரத்தையும்” பரிகரிப்பார் என்று சொன்னார் (1 கொரிந்தியர் 15:24). கொலோசெயர் 1:16 அநேகக் காரியங்களை

வரிசைப்படுத்தி "துரைத்தனங்களும்," "அதிகாரங்களும்" "... சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டன" என்று கூறுகிறது.

"அதிகாரங்கள்" (*kuriotēs*)"வல்லமைகள்" (*dunamis*) ஆகியன 2 பேதுரு 2:10, 11ல் குறிப்பிடப்பட்டுள்ளது. கொலோசெயர் 1:16 லும் "கர்த்தத்துவங்கள்" (*kuriotēs*), "துரைத்தனம்" (*archē*), "அதிகாரங்கள்" (*exousia*) பேசப்படுகிறது. நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிற வசனப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள வித்தியாசப்பட்ட பதங்களான "துரைத்தனம்," "அதிகாரம்," "வல்லமை" மற்றும் "கர்த்தத்துவம்" ஆகியவை எப்படி பயன்படுத்தப்பட்டுள்ளது? இந்தப் பதங்களெல்லாம் வசனங்களில் பல வித்தியாசப்பட்ட பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது - நன்மையானதாகவும் தீமையானதாகவும், பூமிக்குரியவகையிலும் பரலோகத்துக்குரிய வகையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்போஸ்தலனுடைய கருத்தெல்லாம் கிறிஸ்து எல்லாவற்றுக்கும் மேலானவர், வானத்திலும் பூமியிலும், ஆவிக்குரிய மற்றும் மாம்சத்துக்குரிய ஒவ்வொருவருக்கும் மேலானவர். தேவன் ஒருவர் மட்டுமே அதற்கு விதி விலக்கு (1 கொரிந்தியர் 15:27).

**வசனம் 21. பேர் பெற்றிருக்கிற எல்லா நாமத்துக்கும் மேலாய்** என்பது பிலிப்பியர் 2:9, 10ஐ நினைவுபடுத்துவதாக உள்ளது: "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும் ..." இந்த வசனப் பகுதியில், எல்லா நாமத்துக்கும் மேலான நாமம் என்பது "இயேசுவைக்" குறிப்பதாக இருக்கலாம், அதன் பொருள் "இரட்சகராகிய யேகோவா."[14] இந்தக் குறிப்பிடத்தக்க பெயர் மத்தேயு 1:21 ல் காணப்படுகிறது, அங்கே தேவதூதன் யோசேப்பினிடத்தில், "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்றான். ஏசாயா 9:6ல் மேசியாத்துவ தீர்க்கதரிசி, "அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு" என்று சொன்னார். எபிரேயர் 1:4, 5 ல் இயேசு தேவ தூதர்களைக் காட்டிலும் மேலானவர் என்று சொல்லப்படுகிறது: "... இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தை சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவரிலும் மேன்மையுள்ளவரானார். எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெபித்தேன் என்றும், நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்கு குமாரானாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காகிலும் எப்போதாகிலும் சொன்னதுண்டா?" ஆகையால், நாம் "இயேசு" எனும் பெயரை (நாமத்தை) நினைத்துப் பார்த்தாலும் அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவருடைய பட்டத்தைக் குறிக்கிற நாமத்தையானாலும், அல்லது "குமாரன்," என்கிற பெயரானாலும் அவை தேவன் அவருக்குக் கொடுத்திருக்கிற "... எல்லா நாமத்துக்கும் மேலான நாமமே அது." கிறிஸ்து எல்லாவற்றிற்கும் எல்லா இடங்களிலும் மேலானவர், அவருடைய நாமம் மற்ற எல்லா நாமத்துக்கும் மேலான நாமம்.

**வசனம் 21. இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும்** எனும் இந்த வாக்கியங்கள் உண்மையே. "இம்மை" என்பதற்கான கிரேக்க வார்த்தை, இந்த உலகத்தைக் குறிக்கிற கிரேக்க வார்த்தை, இந்த உலகத்தைக் குறிக்கிற

அர்த்தத்தில் *kosmos,* என்பதல்ல (KJV) அல்லது சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தையும் குறிப்பதல்ல, ஆனால் *aiōn,* என்று சொல்லப்பட்டுள்ளது, அதன் பொருள் காலத்தைக் குறிப்பது, நிகழ்கால மற்றும் எதிர்காலக் காரியங்களைக் குறிப்பது.[15] *aiōn,* எனும் பெயர்ச்சொல் "இம்மை," என்ற நிகழ்காலத்தையும். "மறுமையையும்" சேர்த்து பேசுகிற சொல் - அதாவது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தொடங்க விருக்கும் எதிர்காலத்தைக் குறிக்கிறது. கிறிஸ்து நிகழ்காலத்திலும் எல்லாவற்றிற்கும் மேலானவர், வருங்காலத்திலும் எல்லாவற்றிலும் மேலானவர். கிறிஸ்தவ சுதந்தரத்தைக் குறித்து பவுல் பேசிய போது இவ்வார்த்தையைப் பயன்படுத்தி மறுபடியும் மறுபடியும் பவுல் பேசுகிறார் (1:5, 18), அதில் நம்பிக்கையைக் குறித்தும் (1:18), இறுதி மீட்பைக் குறித்தும் (1:14; 4:30), கிறிஸ்துவின் நித்திய இராஜ்யத்தில் கிடைக்கும் இடம் (5:5), மற்றும் தேவனுக்கும் உண்டாகும் புகழ்ச்சி (3:20, 21) ஆகியவைகளை குறித்து பேசுகிறார்.

**வசனம் 22.** தேவன் தமது வல்லமையினால், எல்லாவற்றையும் கிறிஸ்துவின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படுத்தியிருக்கிறார்: **எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்.** "கீழ்ப்படுத்தினார்" என்பது *hupotassō,* என்பதன் மொழிபெயர்ப்பு, இது "ஒருவருக்கு கீழ்ப்படுத்துவது என்கிற இராணுவச் சொல்,"[16] படைவீரர்கள் அனைவரும் கட்டளையிடும் இராணுவ அதிகாரிக்கு கீழ்ப்படிவது போன்றது.

> ஆகையால், செயலானது [கடந்தகால வினையில் … *hupotassō,*] தெளிவானதும் முழுமையானதுமான உயர்த்துதலான வரமாக இருக்கலாம். கிறிஸ்துவை தேவனுடைய வலது பாரிசத்தில் உயர்த்தியபோது எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்துதலும் எல்லாவற்றுக்கும் … அவரை அதிகாரம் பெற்றவராக்குவதும் நிகழ்ந்தது.[17]

மரித்தோரிலிருந்து அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின், கிறிஸ்து, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னார் (மத்தேயு 28:18). அவரே எல்லாவற்றுக்கும் மேலான கர்த்தர்!

தமது நிருபத்தில் பவுல் இங்கு தான் **(ஒரே) சபை** எனும் பதத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். எப்படியாயினும் முழு நிருபமும் சபையைப் பற்றியதுதான், இங்கு அதை முதல் முறையாகக் குறிப்பிட்டு சபை தேவனுடைய நோக்கத்தில் உயர்த்தப்பட்ட நிலையில் விளக்கப்படுத்தப்படுகிறது. "சபைக்கு" கிரேக்க பெயர்ச்சொல் *ekklēsia.* இது ஒரு (*ek,* "ஒன்றிலிருந்து") (*kaleō,* "அழைக்கப்படுதல்") தொகுப்பு வார்த்தையாகும். இது "கூடியிருக்கிற" ஒரு கூட்ட மக்களைக் குறிப்பிடுவது.[18] இது புதிய ஏற்பாட்டில் இஸ்ரவேலரின் சபையைக் குறிப்பிடப் பயன்படுத்தப் பட்டது (நடபடிகள் 7:38), மற்றும் அழைக்கப்பட்ட எந்த கூட்டமைக்கும் (நடபடிகள் 19:32, 39, 41), தேவனுடைய ஜனங்கள் கூடி வருகிற உள்ளூர் சபைக்கும் (நடபடிகள் 8:1, உதாரணராக), குறிப்பிட்ட பகுதியில் கூடிவரும் உள்ளூர் சபைக்கும் (1 கொரிந்தியர் 16:1; 2 கொரிந்தியர் 8:1; கலாத்தியர் 1:2), உலகளாவிய சபை, அல்லது கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்ட அனைவரையும் குறிப்பிடுகிறது (மத்தேயு 16:18; கொலேசெயர் 1:18; எபேசியர் 1:22). சபை என்பது தேவனால்

அழைக்கப்பட்ட மக்கள் கூட்டம் (2 தெசலோனிக்கேயர் 2:14) இதை கீழ்ப்படிதல் மூலம் பெற்றார்கள் (நடபடிகள் 2:37-47).

பவுல் சபைக்கு **அவரைத் தலையாகத் தந்தருளினார்** என்று எபேசியர்களிடம் உறுதிப்படுத்தினார். கிறிஸ்து உலகளாவிய எல்லாவற்றுக்கும் தலையாக இருக்கிறது போலவே சபைக்கு அவரை ஈவாகக் கொடுத்து தலையாக்கினார். "தலை" என்று குறிப்பிடப்படுவது (*kephalē*) "*எந்த மேலான்மைக்கும், பிரதானத்துவத்துக்கும் தலைமைக்கும்; … எஜமானர்களுக்கும், கர்த்தாக்களுக்கும்* குறிப்பிடப்படுவது."[19] இந்த வசனப் பகுதியில், கிறிஸ்து சபைக்குத் தலையாக இருக்கிறார் என்பது சபைக்கு அவரே அதிகாரி என குறிப்பிட்டுக் காட்டுவது. "துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும்" தலைவராய் அவர் இருக்கிறார் என்று கிறிஸ்துவைக் குறித்து கொலோசெயர் 2:10 ல் சொன்னபோது பவுல் தலைவர் எனும் பதத்தை மேற்குறித்த வகையில் தான் பயன்படுத்தினார். சபை வழிகாட்டப்படலுக்கும் நோக்கத்துக்கும் கிறிஸ்துவுக்கும் அவருடைய சித்தத்துக்கும் காத்துக் கொண்டுள்ளது. கிறிஸ்து மறுரூபமானபோது தேவனுடைய உரிமைக் கட்டளையை நாம் நினைவுகூருகிறோம்: "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்; *இவருக்குச் செவிகொடுங்கள்!*" (மத்தேயு 17:5; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வது புதிய ஏற்பாட்டை அவருடைய சாதனமாக ஏற்றுக்கொள்வதற்கும் (காண்க எபிரெயர் 9:15-17), புதிய ஏற்பாட்டு வார்த்தைகளை அவருடைய கட்டளைகளாகவும் (1 கொரிந்தியர் 14:37), "தேவனுடைய வாக்கியத்தின்படி" நாம் பேசுகிறோம் என்று நிச்சயித்துக் கொள்ளவும் (1 பேதுரு 4:11) செய்வதாகும். சபையாராகிய நாம், செயல்படுகிற எல்லா காரியங்களுக்கும், கிறிஸ்துவையே எல்லா அதிகாரமுடையவராக நோக்கிப் பார்க்கவேண்டும், அது ஆராதனையிலானாலும், ஆளுகை அமைப்பினாலும், அல்லது ஊழியத்திலானாலும் நாம் கிறிஸ்துவையே பார்க்க வேண்டும்.

கிறிஸ்து சபைக்கு தலையாக இருக்கிறபடியால், உலகத்தின் சகல காரியங்கள் மேலும் தலையாயிருக்கிறவருடைய பார்வையிலே சபையானது உயர்த்தப்பட்டு, "அவளுடைய சகல மகிமையிலும்" அவளை (சபையை) தமக்கு முன்பாக நிறுத்துவதற்கு சபையானது உயர்த்தப்பட்டது (5:27). சபை கிறிஸ்துவுக்கு முன்பாக மதிப்பு மிக்கது, ஏனெனில் "தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (5:25) அதை இரட்சித்துமிருக்கிறார் (5:23). பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மனிதவர்க்கமும் தேவனிடத்தில் ஒப்புரவாகி சபையில் ஒரு அங்கமாக இருக்கிறார்கள் (2:16). சபையைக் குறித்தும் மனிதனுடைய இரட்சிப்பிலே சபை கொண்டுள்ள அவளுடைய இடத்தையும் குறைத்து மதிப்பிடுகிற எவரும் "கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து" எனும் வாக்கியத்தை மறந்து விட்டவர்கள் போலவே காணப்படுகின்றனர் (5:25). மேலும் அதைத் தமது சுய இரத்தத்தினாலே கிரயத்துக் கொள்ளப்பட்டதையும் மறந்து போயினர் (நடபடிகள் 20:28). சபை - கிறிஸ்துவின் இலக்கு, மிகப் பெரிய கிரயம் செலுத்தி பெற்றார் - எனவே அவள் அவரைத் தனது தலையாகக் கனப்படுத்தி கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபேசியர் 5:24).

**வசனம் 23.** இந்த வசனம் சபையை கிறிஸ்துவின் **சரீரமாகக்** காட்டுகிறது. கிரேக்கப் பெயர்ச்சொல்லாகிய *sōma,* தனது நிருபத்தில் குறைந்த பட்சம்

எட்டுமுறை பயன்படுத்திய பவுல், “சரீரம்” என்றே மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த வசனத்தில். சபை கிறிஸ்துவின் சரீரம் என்று கூறியுள்ளார். கிறிஸ்து சரீரத்தின் ஒரே “தலையாக” முன் நிறுத்தப்படுகிறார், சபையும் “ஒரே சரீரமாக” முன் நிறுத்தப்படுகிறது (காண்க 4:4).

இந்த உருவகம் அநேக பயன்பாடுகளைக் கொண்டது. 1 கொரிந்தியர் 12:12-26ல் சபையை மாமிச சரீரத்துக்கு ஒப்பிட்டு, மாம்ச சரீரம் தலைக்குக் கீழ்ப்படிகிறது போல சபை கிறிஸ்துவுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும். மாம்ச சரீரம் அநேக அங்கங்களைக் கொண்டு அமைவு பெற்றிருக்கிறது போலவே, சபைக்கும் அநேக அங்கத்தினர்கள் உண்டு; ஆகிலும் ஒரே சரீரமும், ஒரே தலையும் மட்டுமே. அதே போல மாம்சசரீரம் வித்தியாசப்பட்ட அலுவல்களைக் கொண்டிருப்பதுபோல, சபையிலும் வித்தியாசப்பட்ட வரங்களை (தாலந்துகளைத்) தேவனிடத்திலிருந்து கொண்டிருக்கிறது. மாம்ச சரீரத்திலுள்ள அனைத்து அங்கங்களும் முக்கியமானவைகள், அவர்களின் பொறுப்புகள் எதுவாயிருந்தாலும் முக்கியமானது; அதே போல, சபையின் அனைத்து அங்கத்தினர்களும் முக்கியமானவர்களும் தேவைப்படக் கூடியவர்களுமாயிருக்கிறார்கள். தலையின் வழிகாட்டலில் ஒவ்வொரு அங்கமும் மாமிச சரீரத்தில் செயல்படும் போது சிறப்பாக இயங்குகிறது. அதேபோல சபையிலிருக்கிற ஒவ்வொரு அங்கத்தினரும் தனது தாலந்துகளைப் பயன்படுத்தி கிறிஸ்துவின் வழிகாட்டல்படி செயல்படும் போது சபை சிறப்பாக இயங்குகிறது. மாமிச சரீரம் தலையின் இசைவாக இணைக்கப்பட்டுள்ளது, அதே போல சபை பிரிவினைகளின்றி கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். சரீரத்தின் அங்கங்களில் ஒன்று வலியை அனுபவித்தால், முழு சரீரமும் பாடுபடும்; சபையிலும் இது உண்மை. கிறிஸ்துவின் சரீரத்திலிருக்கிற அங்கத்தினர்கள் மற்ற அங்கத்தினர்களின் வலியிலும் சந்தோஷத்திலும் பங்குபெறுவது அவசியம்.

ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு கிறிஸ்து இந்த உலகத்தில் சரீரத்தைப் பெற்றிருந்தார். இப்பொழுது, அவருக்கு மாமிசப் பிரகாரமான சரீரம் இல்லாவிட்டாலும் இந்த உலத்தில் அவருக்கு ஆவிக்குரிய சரீரமாகிய சபை இருக்கிறது: சபை, கிறிஸ்துவின் சரீரம், ஒரு சாதாரண அமைப்பாக இருந்து கிறிஸ்து கட்டுப்படுத்துகிற நிறுவனமல்ல. இந்த அமைப்பு ஒரு ஜீவனுள்ளதும் எல்லா உறுப்புக்களையும் இயக்குகிறதுமான ஒரு நிறுவனம், இதன் உயிரோட்டம் அதன் தலையான கிறிஸ்துவிடமிருந்து வருகிறது, அவரது பெலத்தால் ஜீவித்திருக்கிறது, அவர் தமது கிரியை செய்கிறதற்கான ஒரு கருவியாகவும் இருக்கிறது.

சபை “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவான” ஒன்று என்றும் சொல்லப்படுகிறது. சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறபடியால், அது கிறிஸ்துவின் நிறைவையும் முன் வைக்கிறது. **அவருடைய நிறைவு** என்ற காரியத்தின் அர்த்தம் என்ன என்பதில் வியாக்கியானிகள் நடுவில் உடன்பாடு இல்லை. “நிறைவு” என்ற வார்த்தை கிரேக்கமொழியில் *plērōma*, என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, இதன் பொருள் “நிறைக்கப்பட்டுள்ள எந்த ஒன்றும் அல்லது நிறைவாயிருக்கிற ஒன்று”[20]; ஆகிலும் இந்த வசனப் பகுதி யில் இந்தப்பதம் என்ன பொருளைக் கொடுக்கிறது என்று உறுதிப்படுத்துவது கடினம். சில விளக்கவுரையாளர்கள் கிறிஸ்து சபையை நிரப்புகிறார்

*என்பதுதான் இதன் பொருள், இதை அவர் நிச்சயமாக செய்கிறார்; ஆனால் இந்த வசனத்தில் "சரீரமும்" "நிறைவும்" சபையைக் குறிப்பதுபோல் தான் தோன்றுகிறது என்கின்றனர்.*

*பிறகு, என்ன அர்த்தத்தில், சபை கிறிஸ்துவின் நிறைவானதாயிருக்கிறது? கலாத்தியர் 4:4; கொலோசெயர் 1:19; 2:9, அதேபோல் எபேசியர் 1:10, 23; 3:19; 4:13 ஆகிய வசனங்களில் பவுல் இந்த வார்த்தை பயன்படுத்திபேசியிருக்கிறார். "நிறைவு" என்று கலாத்தியர் 4:4 ல் சொல்லப்படுவது, "காலம் நிறைவேறின போது" என்று அர்த்தத்தைக் கொடுப்பது போல் தெரிகிறது. இதே பொருள் எபேசியர் 1:10 ல் காணப்படுகிறது, இங்கே பவுல், "காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி" என்று சொன்னார். 3:19ல் கிறிஸ்தவர்கள் "தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நிறைக்கப்படவும்," என்று பவுல் பேசினார். எபேசியர் 4:13ல் சபை "கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக" வளருவதைப் பற்றி பேசுகிறது. கொலோசெயர் 1:19ல், தெய்வீகத்தில் சகல பரிபூரணம் கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த ஒவ்வொரு வசனப்பகுதியிலும், "நிறைவு" என்பது ஒரு தம்ளரில் தண்ணீர் நிரப்பப்பட்டிருப்பது போல, முழுமையாக நிரப்பப்பட்டிருத்தல், ஏதோ ஒன்றை அல்லது யாரோ ஒருவரை நிறைவு செய்வது ஆகிய பொருள்களைக் கொடுக்கிறது. ஆகையால், ஒரு கண்ணாடி தம்ளர் நிரப்பப்படுவது போல சபையானது கிறிஸ்துவால் நிரப்பப்படுதலை பேசுகிறது என்ற முடிவுக்கு வருகிறோம். சபை ஏதோ ஒருவகையில் கிறிஸ்துவின் நிறைவைப் பெற்றிருப்பது, ஒரு தலை சரீரத்தையுடையதாயிருக்கும் போது மட்டுமே நிறைவாய் காணுவது போன்றது. கிறிஸ்து சபையை கிரயத்துக்குத் கொள்ளும் படியாக உலகத்துக்குள் வந்தார். சபை கிறிஸ்துவுக்குள் நிறைவு பெற்றது: அவர் இரட்சகர், சபை இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம்.*

*இந்தப் பகுதியை பவுல்* ***எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் கிறிஸ்து நிரப்புகிறார்*** *என்ற வார்த்தைகளுடன் ஜெபித்து நிறைவு செய்கிறார். கிறிஸ்து உலகத்தை நிரப்புகிறார், அவர் சபையையும் நிரப்புகிறார். ஒரு வல் லமையுள்ள கர்த்தராக, தம்மைப் போலவே எல்லாவற்றிலும் கிறிஸ்துவை தேவன் நிரப்புகிறார். பவுலின் ஜெபம் எபேசியர்கள் "அழைக்கப்பட்டதன் நோக்கத்தை" இன்னும் முழுமையாய் அறிந்து கொள்ளும்படியாகவும், "அவருடைய ஐசுவரியமுள்ள சுதந்தரத்தின் மகிமையையும்," "அவருடைய சத்துவத்தின் வல்லமையையும்" அறிந்துகொள்ள வேண்டும் என்று ஜெபித்து முடித்தார். தேவனுடைய இந்த மகத்தான வல்லமை கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிய போது வெளிப்படுத்தப்பட்டது, அவரை அவர் தமது வலதுபாரிசத்தில் உயர்த்தி, எல்லாவற்றின் மேலும் சபையின் மேலும் தலையாக வைத்தார்.*

## பயன்பாடு

***நமது ஸ்தானத்தை அறிதல் (1:15-23)***

*எனது மகன் கால் பந்தாட்டம் விளையாடும் போது, அவனது பயிற்சியாளரின் மிகப்பெரிய வேலை ஒவ்வொரு விளையாட்டு வீரரையும் அந்த குழுவில் உள்ள அனைவரும் அவரவர் சரியான ஸ்தானத்தில் நின்று*

விளையாடுவதை போதிக்கக் கூடியவராயிருந்தார். அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது, ஒரு விளையாட்டு மாணவனை மட்டும் தன் ஸ்தானத்தில் போய் நிற்கும்படி சொல்லிக் கொண்டே இருந்தார், அந்த இளைஞனிடமிருந்து ஒரு குழப்பப் பார்வையை மட்டுமே பயிற்சியாளர் பெற்றார். ஒரு விளையாட்டு வீரனின் ஸ்தானத்தை தான் அறிந்து கொள்வதே அவன் எவ்வளவு சிறப்பாக விளையாட முடியும் என்று நிர்ணயிருக்கிறது.

ஆவிக்குரிய முறையில் இதை சொல்வதும் அதே போன்றதுதான்: தேவனுக்கு முன்பாக நமது ஸ்தானத்தை நாம் அறிந்து கொள்வது அவசியமானது. நமது அன்றாட பயிற்சி கிறிஸ்துவுக்குள் நமது ஸ்தானத்தை புரிந்து கொள்வதற்கு மேலாகப் போய் விடாது.

எபேசியர் 1-3ல், பவுல் கிறிஸ்தவர்களின் ஸ்தானத்தை விளக்கப்ப டுத்துகிறார். அதிகாரங்கள் 4 லிருந்து 6 வரை, நமது பயிற்சிகள் பற்றி சொல்லுகிறார் - அதாவது, நமது ஸ்தானத்தில் ஒவ்வொரு நாளும் நாம் எப்படி செயல்பட வேண்டும் என்று சொன்னார். நாம் தெரிந்து கொள்ளப்பட்டு, மீட்கப் பட்டு, அச்சாரம் அளிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் ஒரு சுதந்தரத்தை உறுதியளித்தார் (1:1-14), அடுத்ததாக, எபேசியர்களுக்காக அவருடைய ஜெபத்தை நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

இந்த சகோதரர்கள் இதைச் செய்வார்கள் அல்லது அதைச் செய்வார்கள் என்று பவுல் ஜெபிக்க வில்லை. மாறாக, அவர்களுடைய புரிந்துகொள்ளுதலுக்காக ஜெபித்தார் (1:17).

கிறிஸ்தவர்களின் மனம் போதிக்கப்பட வேண்டும் என்று மட்டும் பவுல் ஜெபிக்க வில்லை என்பதை கவனியுங்கள். அவர், “உங்கள் மனக் கண்கள் திறக்கப்பட வேண்டும் ...” என்று ஜெபித்தார் (1:18). வேதாகமத்தில், “இருதயம்” என்பது வெறும் மனதைக் காட்டிலும் மேலானது. இதன் பொருள் உள்ளான மனுஷன், ஜீவனின் ஆழமான பகுதி என்பது, நாம் மனசாட்சியுடன், புத்திக் கூர்மையுடன், பொறுப்புணர்வுடன், உள்ளான அறிவுத்திறனுடன் செயல்படுவதை இந்த வார்த்தை உள்ளடக்கியுள்ளது. புத்திக் கூர்மையுடன் கூடிய சில சத்தியங்களுக்கும் மேலான சிலவற்றிற்காக பவுல் ஜெபித்தார். இயேசுவின் மேன்மையையும், நமக்காக அவர் சம்பாதித்த இடத்தையும் நமது ஆத்துமாக்களின் ஆழமான ஒதுக்கிடங்களிலும் நாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்பினார்.

1:18-21 ல் பவுலின் ஜெபத்தின் மூன்று கருத்துக்கள் இயேசுவை புரிந்து கொள்ளச் செய்யும் நமது ஆவலை அதிகரிக்கச் செய்கிறது. அவற்றை பற்றிக் கொள்வது நமது ஜீவிய கால சாதனை. இந்த சத்தியங்களை எவ்வளவு ஆழமாய் பற்றிக் கொள்கிறோமோ, அவ்வளவாய் தேவனுக்கு முன்பாக இருக்கிற நம்முடைய ஸ்தானத்தை குறித்து நமக்கு நாமே அறிந்து அதிலே உறுதியான நம்பிக்கையுடையவர்களாவோம். எவ்வளவாய் நிறைவுடன் நாம் புரிந்து கொள்கிறோமோ, அவ்வளவாய், இன்னும் ஆழமான முறையில் நம்மில் கிரியை செய்து நமது கிறிஸ்தவ ஜீவியத்தில் செயல்படுத்துவோம்.

*நமக்குள்ள எதிர்பார்ப்பு.* கிறிஸ்தவர்கள் இன்னும் அதிகமாய் பற்றிக்கொள்ளவேண்டுமென்று பவுல் விரும்பும் முதலாவது உண்மை இயேசுவில் நமக்குள்ள எதிர்பார்ப்பு: தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், “பரிசுத்தவான்களிடத்தில் நமக்கு

உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் ... நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறேன்" (1:18).

பவுல் நம்மை நித்தியத்திலிருந்து நித்தியத்துக்கு ஊக்கப்படுத்தும்படியான ஒரு சிறிய சொற்றொடர் மூலம் விவரிக்கிறார். "... தாம் அழைத்ததினாலே உண்டாயிருக்கிற நம்பிக்கை." நாம் கடந்த கால நித்தியத்திலிருந்து, இரட்சிப்புக்காக கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொண்ட வேளையில் நாம் தெரிந்து கொள்ளப்பட்டோம். நம்பிக்கை அழைக்கப்பட்ட இனிவரும் நித்தியத்தை நிறைவாக உணரச் செய்யும். இந்த நம்பிக்கை ஒரு குழந்தை தனக்குக் கிடைக்க விருக்கும் பரிசுப் பொருளை எதிர்பார்ப்பது போன்றதல்ல. இல்லை, விசுவாசிகளாகிய நமக்கு உள்ள எதிர்பார்ப்பு மிகவும் உறுதியானது, தேவன் நமக்குச் செய்தவைகளை முழுமையாக நம்பியதால் நமது எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற உறுதியான நம்பிக்கையை நாம் பெறமுடியும். இந்த உறுதியான எதிர்பார்ப்பு நம்முடைய உள்ளான மனது வரைக்கும் ஊடுருவிச் செல்லும்படி பவுல் ஜெபித்தார்.

நமது நம்பிக்கையின் உறுதி நாம் செய்தவைகளில் வேர் பிடிக்கவில்லை, நாம் இந்த நிருபத்தில் என்ன செய்ய வேண்டும் என்று இன்னும் ஒரு வார்த்தைகூட படிக்கவில்லை. பவுல் தான் தேவன் நமக்கு செய்துள்ள தெரிந்து கொள்ளுதல், மீட்குதல், மன்னித்தல் ஆகியவைகளை விளக்கப்படுத்தியிருக்கிறார். தேவன் நமக்குக் கொடுப்பதாக வாக்களித்த சுதந்தரத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார். பிலிப்பியர்களுக்கு பவுல் "உங்களில் நற்கிரியைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று" எழுதினார் (பிலிப்பியர் 1:6). தமது ஆச்சரியமான கிருபையின் மூலமாக தேவன் சாதித்தவைகளில் நமது நம்பிக்கை சார்ந்திருக்கிறது.

நமது நம்பிக்கை இன்னும் கட்டப்படாதிருந்தால், பவுல் விளக்கமாக பேசுவதன் மூலம், நமக்குரியதான "சுதந்தரத்தின் மகிமையுள்ள ஐசுவரியத்தை" எழுதினார். நாம் தேவனுடைய மகத்தானத் திட்டத்தில் இருப்பவர்கள். அவருடைய குமாரனாகிய இயேசுவுக்கு உடன் சுதந்தரர் (ரோமர் 8:17). அவருக்குள்ள சகலமும் நம்முடையது!

அடுத்து பவுல் சொன்னதாவது, "நீங்கள் அவருடைய *சுதந்தரத்தை* அறிய வேண்டுமென்று விரும்புகிறேன் ... அவருடைய *மகிமையுள்ள* சுதந்தரத்தை நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன் ... நீங்கள் அவருடைய மகிமையுள்ள சுதந்தரத்தின் *ஐசுவரியத்தை* அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்." பவுல் இதற்குமேலும் போதியளவு தேவனுடைய உச்சக்கட்ட ஆசீர்வாதங்களின் பரிபூரணம் தமது ஜனங்களுக்கு வைத்திருப்பதை விளக்கிச் சொல்லி வலியுறுத்த இயலவில்லை. மறுபடியும் மறுபடியும், தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதத்தின் ஐசுவரியங்களின் மகத்துவத்தை உட்படுத்திப் பேசினார். இந்த சொற்றொடர்களைக் கவனித்துப் பாருங்கள்: "... அவருடைய கிருபையின் ஐசுவரியம்" (1:7); "... அவருடைய கிருபையின் ஐசுவரியமுள்ளவராய்" (2:4); "... கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியம்" (3:8); "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்" (3:16).

விசுவாசி தனது ஸ்தானத்தையும் ஆவிக்குரிய ஆதாரத்தையும் பற்றிக்

கொண்டிருப்பாரானால் பயத்துக்கு அவருக்குள் இடமில்லை, வாழ்க்கையில் கவலைப்பட அவருக்குள் இடமில்லை, சந்தேகப்பட இடமில்லை. தேவன் அவருடைய அனைத்து எதிர்காலத்தேவைகளையும் நன்கு சந்திப்பதால் அவருடைய எதிர்காலம் சந்தேகத்துக்குரியதாயிராது. விசுவாசிக்கிறவர் இன்று ஆவிக்குரிய வெற்றி நடைபோட முடியும், அவருக்கு எதிர்காலம் என்ன வைத்துள்ளது என்று அவருக்குத் தெரியும்.

சமீபத்திய செய்தித்தாள் வெளியீட்டாளர் William Randolph Hearst உலக முழுவதிலுமிருந்து கலைபொருள் பொக்கிஷத்தை சேகரிக்கிற சந்தர்ப்பத்திற்கு முதலீடு செய்தார். ஒருநாள் திரு. Hearst தனக்கு சொந்தமாக்கிக் கொள்ள விரும்பிய விலைமதிப்புள்ள ஒரு கலைப் பொருள் இருப்பதாக கேள்விப்பட்டு, தனது முகவரை வெளிநாட்டுக்கு அனுப்பி விசாரித்து வரச் செய்தார். பல மாதத் தேடலுக்குப் பின், முகவர் அவருக்கு அளித்த அறிக்கையில் தான் அந்த பொக்கிஷத்தைக் கண்டுபிடித்து விட்டதாகக் குறிப்பிட்டார். அது திரு ஹார்ஸ்ட்டின் விற்பனைப் பொருள் கிடங்கில் இருந்தது! ஹார்ஸ்ட் வெறிகொண்டு தான் ஏற்கனவே சொந்தமாக்கியிருந்த பொக்கிஷத்தை தேடிக் கொண்டிருந்திருக்கிறார் ஆனால் கிடைத்திருப்பதையோ அனுபவிக்க இயலவில்லை.

நாம் இப்படி வாழ வேண்டாமே. நாம் ஏற்கனவே பெற்றிருக்கிற ஏதோ ஒன்றுக்காக தேவன் கொடுக்கும்படி வாழ்நாள் முழுவதும் பிச்சை கேட்டு கெஞ்சிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நமக்கு அவருடைய முழுமையான மன்னிப்பு ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. நமக்கு நித்திய ஜீவன் இருக்கிறது. தேவனுடைய ஐசுவரியத்தைப் பெறும் வாய்ப்பு இருக்கிறது. பவுல் ஜெபிக்கிறபோது நாம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பதெல்லாம் நம்முடையது என்று முழு எதிர்பார்ப்போடு காத்திருக்கலாம்.

*நாம் பெற்றுக் கொண்டுள்ள வாழ்க்கையின் சிறப்புகளை உணரும் தன்மை.* பவுல், “பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கும் ... மகத்துவம் இன்னதென்று நீங்கள் அறியும் படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்” என்று ஜெபித்தார் (1:18, 19).

இது இந்த பிரபஞ்சத்தில் எங்கோ தேவன் கிரியை செய்து கொண்டுள்ள வல்லமையல்ல. இல்லை, தேவனுடைய வல்லமை கிறிஸ்தவர்களுக்குள்ளே தனிப்பட்டமுறையில் இருப்பதை அனுபவிக்கத்தக்கதாக பவுல் ஜெபம் பண்ணினார்.

தேவன் நமது வாழ்க்கையில் எப்படிப்பட்ட வல்லமையை பயன்படுத்தி நம்மை விடுவிக்க விரும்புகிறார் என்பதை கவனியுங்கள்: “தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே ...” (1:19, 20). கிறிஸ்தவர்களாகிய நமக்கு இருக்கிற தேவனுடைய வல்லமையை விவரிக்க சாத்தியமுள்ள அனைத்து வார்த்தைகளையும் பவுல் ஒன்று சேர்த்து பேசியிருக்கிறார். முதலாவதாக அவர் *dunamis,* என்ற வார்த்தையை பயன்படுத்தி, நமது அடிப்படை வார்த்தைகளாகிய “டைனமோ” “டைனமேட்” ஆகியவைகளை ஒப்பிட்டார். அது நம்ப இயலாத அளவு சக்தி கொண்டது என்பதை சுட்டிக் காட்டுகிறது.

*பிறகு பவுல் இந்த வல்லமை தேவனுடைய "கிரியைகளைச் செய்தல்" என்பதை சார்ந்திருப்பதாக - அதுதான் கிரேக்க மொழியில் energeia, அது நமக்கு "energy." என்ற வார்த்தையைக் கொடுக்கிறது - என்று கூறினார். தேவனுடைய தெய்வீக வல்லமையால் நாம் பெலப்படுத்தப்பட்டிருக்கிறோம். நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் வெற்றிக்காக நாம் ஆவிக்குரிய வகையில் உச்சக்கட்ட நிறைவைப் பெற்றிருக்கிறோம்!*

*அடுத்ததாக, கிறிஸ்தவர்கள் பலத்தால் வல்லமை பெற்றுள்ளனர் என்று பவுல் கூறினார் - வெறும் பலம் மட்டுமல்ல, வல்லமையான பெலம் (சத்துவ வல் லமை). நாம் பலத்தால் ... சக்தியும், செயலும், சத்துவ வல்லமையும் கொண்ட பலத்தால் தேவனால் நிரப்பப்பட்டிருக்கிறோம்.*

*தேவனுடைய பிள்ளைகளாக நாம் வாழ நமக்கு கிடைக்கக் கூடிய இந்த வல்லமையைப் பற்றிய எந்த சந்தேகத்தையும் அழித்துப்போட, பவுல் நமக்காக அதை விளக்கப்படுத்தினார். அவர் இயேசுவை உயிரோடு எழுப்பிய அதே பலம்தான் - மரணம் இருக்குமிடத்தில் விளங்கும் ஜீவனைக் கொடுத்தது, பெலவீன இடங்களில் பெலனளித்தது, வெளிப்படையான தோல்வி நேரத்தில் வெற்றியைக் கொடுத்தது, ஏமாற்றமடைந்த நேரத்தில் சந்தோஷத்தைக் கொடுத்தது. தேவனுடைய வல்லமை சூழ்நிலைகளை வெற்றி கொள்ளச் செய்து வாழ்க்கையை மாற்றிப் போட்டது - அந்த வல்லமை நம்முடையது! கீழ்வருமாறு பவுல் சொன்னதில் வியப்பு இல்லை,*

> *"... அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறிகிறதற்கு ..." (பிலிப்பியர் 3:10).*
>
> *என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலிப்பியர் 4:13).*
>
> *நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென் (எபேசியர் 3:20, 21).*

*நம்முடைய அன்றாட நடக்கைக்கு அந்த தெய்வீக வல்லமை கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. நாம் அதைப் புரிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும் என்பதே பவுலின் ஜெபம்.*

*நாம் சேவிக்கிற ஒருவரின் உயர்வு. நம்மை இரட்சித்தவர் யார்? இதையெல் லாம் நமக்கு செய்பவர் யார்? நாம் அவரை அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானது. அவருடைய சகல மகிமையிலும் யார் அவர் என்பதை அறிந்து கொள்ளாமல் போவோமானால் அவருக்காக நாம் வாழ முடியாது:*

> *எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தமது வலது பாரிசத்தில் உட்காரும்படி*

*செய்தார் (எபேசியர் 1:20, 21).*

*இந்த உலகத்தில் இயேசுவைக் காட்டிலும் மேலானது எதுவுமில்லை. இதற்கு முன் வாழ்ந்த எவரும் அல்லது இதற்குப்பின்பு வாழப்போகிற எவரும் இயேசுவைக் காட்டிலும் மேலானவரல்ல. அவர் சாதாரணமாக சகல துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் மேலானவர் அல்ல. அவர் அவர்கள் எல்லாருக்கும் "மிகவும்" மேலானவர். என பவுல் சொன்னார்,*

> *ஆதலால் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலிப்பியர் 2:9-11).*

*இயேசு எல்லாவற்றிற்கும் "மேற்பட்டிராத" துரைத்தனமோ, அதிகாரமோ, வல்லமையோ, கர்த்தத்துவமோ எதுவும் கிடையாது. எபேசியர் 1ல், பவுல் குறைந்தபட்சம் நான்குமுறை நாம் அவருக்குள் இருக்கிறோம் என்று சொன்னார்.*

*நாம் சேவிக்கிற ஒருவர் எப்படி உயர்த்தப்பட்டிருக்கிறார் என்பதைக் காணும்போது, மற்றும் தேவன் நம்மை அவருக்குள் வைத்துள்ளார் என்பதை நாம் அறியும்போது, அது நமக்கு பாதுகாப்பான சுய - கௌரவத்தை அளிக்கிறது, ஏராளமான நம்பிக்கையோடு அவர் நமக்கு செய்துள்ள யாவற்றிற்காகவும் தேவனுக்கு முன்பாக நமது அன்றாட நடக்கையை நாம் வாழ்ந்து காட்டுவோம்.*

*முடிவுரை. பரலோகத்திலிருக்கிற எல்லா வாய்ப்புகளும் நமக்குரியது. ஆவிக்குரிய பாதுகாப்பில்லாத பலவீனமான கிறிஸ்துவுக்குள் நிச்சயமற்ற கிறிஸ்தவத்துடன் ஒரு போதும் நாம் திருப்திபட்டுக் கொள்ளக் கூடாது, மாறாக, தேவனுடைய பிள்ளைகளாக நாம் வாழுவோம், இப்படி ஏற்கனவே மகிமையுள்ளதும், ஆசீர்வதிக்கப்பட்டதுமான சுதந்தரத்தை ருசிபார்த்த அனுபவத்தை ஏற்கனவே துவங்கியுள்ளது ஒரு நாளில் அது நம்முடையதாகும், அதை முழுமையாய் அனுபவிப்போம்.*

கிறிஸ் புல்லார்டு

---

குறிப்புகள்

[1]Kenneth S. Wuest, *Wuest's Word Studies from the Greek New Testament for the English Reader: Ephesians and Colossians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 51. [2]Ibid. [3]Ibid. [4]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament,* 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1992), 918. [5]S. D. F. Salmond, "The Epistle to the Ephesians," in *The Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 3:273. [6]Wuest, 52. [7]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 56. [8]Wuest, 175. [9]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (Lon-

don: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 436. [10]Zodhiates, 911. [11]Wuest, 54. [12]Bullinger, 498, 593, 900. [13]Zodhiates, 912. [14]Bullinger, 422. [15]Wuest, 56. [16]Ibid. [17]Salmond, 279–80. [18]Zodhiates, 910. [19]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 345; see also Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 541–42. [20]Bullinger, 312.